ஐயர் ஜாதி. பதில் இருந்தவர் சுந்தரக்குருக்கள்.
தேவப்பாளையம்.

1, பங்காளி ஒருவர் இறந்துவிட்டால் 10 நாள் தீட்டு இருக்கும்.

தாய்மாமனை தாய்மாமன் மனைவியே இறந்துவிட்டால் 3 நாள் தீட்டு இருக்கும்.

அத்தை, அல்லது அத்தை புருஷன் இறந்துவிட்டால் 1½ நாள் தீட்டு இருக்கும்.

2 கருமாதிச் சீர் முடிந்தவுடன் தீட்டு போகிறது.

இறந்தபின் 10 நாள் முடிந்து 13வது நாளுக்குள் கருமாதிச் சீர் செய்வார்கள்.

3. கருமாதிச் சீர் முடிந்தவுடன் கோவிலுக்குள் போகலாம்.

4. தீட்டு இருக்கும் போது கோவிலுக்கு போகக் கூடாது, நெற்றியில் விபூதி வைக்கக்கூடாது. இவர்களுடைய தீட்டுக்கு சம்மந்தப்படாதவர்களுக்கு சாப்பாடு போடக்கூடாது. நம்ம வீட்டில் கல்யாணம், திரட்டி இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் எதுவும் செய்யக் கூடாது.

5 கருமாதி முடிந்தவுடன் எல்லாக் காரியங்களும் செய்யலாம். ~~[illegible]~~

கருமாதி முடியு முன்பு கோவிலுக்கு போகக்கூடாது
பொங்கல் வைக்கக் கூடாது. நல்ல காரியம் எதுவும்
செய்யக் கூடாது.

ஐயர்களில் உள்ள முறைப்படிதான் கணக்கப்பிள்ளை வீட்டிலும் வேறு மாற்றமில்லை.

---

மற்றபடி நீங்கள் குறிப்பிட்ட இதர ஜாதிகள் எல்லா வற்றிலும் ~~[illegible]~~ கருமாதிச்சீர் முடிந்தவுடன் தீட்டு முடிகிறது. கருமாதிச் சீர் செய்வது எல்லா ஜாதியிலுமே குறிப்பிட்ட நாள் இல்லை. சிலர் இறந்த அன்றே கருமாதிச்சீர் செய்வார்கள். அல்லது 3வது நாளில் செய்வார்கள். 7வது நாளில் செய்வார்கள். எல்லா ஜாதியிலும் இப்படி செய்வார்கள். இது அவர்கள் வசதியைப் பொருத்தது. கருமாதி சீர் செய்ய எத்தனை நாள் ஆனாலும் அதுவரை தீட்டு இருக்கும்.

ஆனால், கருமாதி முடிந்தவுடன் சிலர் கோவிலுக்கு போவார்கள். சிலர் 30 நாள் கழித்துத்தான் போவார்கள். இது பற்றி ஜாதிகளில் கருமாதி முடிந்தவுடன் கோவிலுக்கு போக வேண்டும் அல்லது 30 நாள் கழித்து கோவிலுக்கு போகவேண்டும் என்ற பிரிவினை கிடையாது. இது ஒவ்வொரு குடும்பத்தின் இஷ்டம் அக்குடும்பத்தில் உள்ளவர்களின் இஷ்டத்தைப் பொருத்தது.

கருமாதி சீர் முடியுமுன்பு எந்த ஜாதியிலும் கண்டிப்பாய் கோவிலுக்கு போகமாட்டார்கள். பொங்கல் வைக்க மாட்டார்கள், கல்யாணம்

செய்யமாட்டார்கள், திருட்டு செய்யமாட்டார்கள், மொட்டை அடிக்க மாட்டார்கள், காது குத்த மாட்டார்கள் இப்படி நல்ல காரியங்கள் எதுவும் செய்யக் கூடாது, மற்ற காரியங்கள் எல்லாம் செய்யலாம்.

மற்றபடி நீங்கள் குறிப்பிட்ட நாட்கள் எல்லா வற்றிலுமே பங்காளி இறந்து விட்டால்தான் தீட்டு மாமன் மைத்துனர் இறந்து விட்டால் தீட்டு இல்லை.

மற்றபடி "தீட்டு என்றால் என்ன?" என்பதற்கு யாருமே சரியான பதில் இருக்கவில்லை. இதை பற்றி யாரைக் கேட்டாலும் இறந்து விட்டால் தீட்டு சவரம் செய்து கொண்டால் தீட்டு, பெண் வயதுக்கு வந்தால் தீட்டு, பெண் வீட்டுக்கு தூரமானால் தீட்டு என்ற பதில்கள்தான் கொடுக்கிறார்கள் தவிர அதற்கு விளக்கமாக பதில் யாரும் இருக்கவில்லை.

சுந்தரக் குருக்கள் அவர்களிடம் "தீட்டு என்றால் என்ன?" என்று விளக்கம் கேட்டேன். அதற்கு அவர் தீட்டு என்றால் "ஒரு வித பயம்" என்று பதில் கொடுக்கிறார். "ஒரு வித பயம் என்றால் என்ன?" என்று நான் திரும்பவும் கேட்டேன். ஆனால் சுந்தரக் குருக்கள் இதற்கு சரியான பதில் கொடுக்கவில்லை. தீட்டு என்றால் என்ன? என்பதை பற்றி எனக்கும் தெரியவில்லை.

மற்றபடி திட்டம் எத்தனை நாள் இருக்கும்
என்பது பற்றி நானே யோசனை செய்து எழுதி
விட்டதாக நினைத்து விடாதீர்கள். இதுபற்றி
எல்லா ஜாதியிடமும் நான் கேட்டேன் அதற்கு
அவர்கள் கொடுத்த பதில்கள் எல்லாம் ஒரே
மாதிரியாகத்தான் வருகிறது அதனால் தான் நான்
இதுபற்றி ஒவ்வொரு ஜாதிக்கும் தனியாக
எழுதாமல் ஒன்றாகவே எழுதிவிட்டேன்.

மற்றபடி நீங்கள் அனுப்பியுள்ள ஜாதிகளில்
கொங்கு செட்டியார், பாண்டிய நாவிதன் இந்த
இரண்டு ஜாதிகளும் பக்கத்தில் இல்லை. அதனால்,
அவர்கள் பதில் இல்லை. அவர்களுக்கும் உறவின்
களை கட்டுப்பாடும் முறையும், திட்டங்கள் பற்றியும்
இதில் எழுதியுள்ளது போல் தான் இருக்குமென்று
நினைக்கிறேன் வேறு மாற்றம் இருக்காது
என்று நினைக்கிறேன்.

வணக்கம்

6/11/67

26/10/67

கேள்வி 26

பதில்: இறந்த சீரின் பொழுது பின்னப்பூ போடுவது கல்யாணமானவரும் போடலாம். கல்யாணமாகாதவரும் போடலாம். ஆனால், பின்னப்பூ போடுவது இறந்து போனவரின் பேரனாக இருக்க வேண்டும்! (இறந்து போனவரின் மகனுடைய பையன்)

கேள்வி 27

பதில்: குடும்பத்தின் பெரிய(மூத்த) குழந்தை இறந்து விட்டால் அதற்கு தனியாக செய்யும் சீர் உண்டும்! அது கீழே.

## கருவாடும் சோறும் கவ்வுதல்

குடும்பத்தின் முதல் குழந்தை இறந்து விட்டால் பிணத்தைப்- புதைத்து விட்டு வந்து கருமாதிச் சீர் செய்வதற்கு வாசலில் புதிய மண்பானை ஒன்று வைத்து அதில் அரைப்படி அரிசி போட்டு அத்துடன் கத்தரிக்காய், அவத்திக்கீரை (அகத்திக் கீரை) இவைகள் போட்டு வேக வைப்பார்கள். பிறகு, நடு வீட்டில் முக்காலி போட்டு அதன் மேல் ஒரு தட்டம் வைத்து அதன் மேல் இலை போட்டு அதில் சமைத்த சாதத்தைக் கொஞ்சம் எடுத்துப் போட்டு அதில் கருப்பட்டி கொஞ்சம் சீவிப் போட்டு நெய் கொஞ்சம் ஊற்றுவார்கள். பிறகு, ஒரு மண் விளக்கில் கொஞ்சம் பால் ஊற்றி அதில் கொஞ்சம் நெய் ஊற்றி வைப்பார்கள். பிறகு, வெற்றிலை பாக்கு, நெய்க்கிண்ணம் இவைகள் எல்லாம் வைத்து விட்டு இறந்து போனவருடைய தாயின் பங்காளியின் மனைவி யானவள் நடு வீட்டில் சாதம் வைத்துள்ள இடத்தில் நீர் விழாவி கரண்டி நெருப்பில் நெய் போட்டு தூபம் காட்டி பூஜை செய்து விட்டு தட்டத்தில் உள்ள சாதத்தை வெளியில் எடுத்து வந்து, சாதத்தைப் பிணைந்து(கவந்து) பூஜை செய்த பெண்ணானவள்

சொம்பில் இருக்கும் தண்ணீரை கையில் ஊற்றி மூன்று கை தண்ணீர் கூரைமேல் வீசிவிட்டு பிறகு, தட்டத்தில் இருக்கும் சாதத்தில் மூன்று கை சாதம் கூரைமேல் வீசுவாள். பிறகு, இறந்து போனவரின் தகப்பன், தாய் மற்றும் முக்கிய சொந்தக்காரர்கள் எல்லாம் கூரைமேல் சோறு போடுவார்கள். பிறகு, விளக்கில் ஊற்றி வைத்த நெய், பால் இவைகளையும், சொம்புத்தண்ணீரையும் நாவிதன் எடுத்துக் கொண்டு இறந்து போனவரின் தகப்பனும் மற்றும் சில உறவினர்களும் சேர்ந்து சுடுகாட்டுக்குப் போயி ஒரு ஆவரஞ்செடிமேல் சொம்பில் இருக்கும் தண்ணீரை மூன்று முறை ஆவரஞ்செடிமேல் ஊற்றி அதன்பிறகு, விளக்கில் உள்ள நெய், பால் இவைகளை ஆவரஞ்செடி மேல் ஊற்றி மறுபடியும் சொம்பில் இருக்கும் தண்ணீரை மூன்று முறை ஊற்றுவார்கள். பிறகு, நெய்பால் கொண்டு வந்த விளக்கை கீழே பூமியில் இப்புற வைத்து இறந்து போனவரின் அப்பாவானவர் காலில் விளக்கை மிதித்து உடைத்து விடுவார். ஆவரஞ்செடிமேல் நெய், பால் ஊற்றுவதும் இறந்து போனவரின் அப்பாதான்.

பிறகு, எல்லோரும் வீட்டுக்கு வருவார்கள். வீட்டுக்கு வந்ததும் வாசலில் ஒரு முக்காலி போட்டு இறந்து போனவரின் அம்மாவை அந்த முக்காலிமேல் கிழக்கு முகமாக உட்கார வைத்து தண்ணி வாப்பார்கள். அப்போது அந்தப் பெண்ணுக்கு கல்யாணங்களில் பெண், மாப்பிள்ளைக்கு தண்ணி வாப்பதுபோல் வெள்ளைச்சாதம், இகப்புச் சாதமும் சுத்திப் போட்டு தண்ணி வாப்பார்கள். ஆனால், இந்த சீருக்கு நிறை நாள் சுத்துவதில்லை.

இந்தப் பெண்ணுக்கு தண்ணீர் வாப்பது அவளுடைய அண்ணன் அல்லது தம்பி மனைவிமார்கள். தண்ணி வாத்த பிறகு அந்தப் பெண்ணை ~~அப்படியே~~ ஈ.ரச்சீலை (நனைந்த சீலை) யுடன் வீட்டுக்குள் கூட்டிச்-செல்வார்கள். அப்போது நாவிதன் வெள்ளைச்சாதம் ஒரு உருண்டை, கருவாடு கலந்த சாதம் ஒரு உருண்டை, அடுப்புக்கரி கலந்த சாதம் ஒரு உருண்டை ஆக மூன்று உருண்டை சாதம் வைத்திருப்பான். பிறகு, நாவிதன் ஒரு பேழை மூடியை எடுத்து வீட்டின் உள்புறம் நிலவு வாசற்படிக்குப் பக்கம் வைப்பான். பிறகு, இறந்து போனவரின் அம்மாவை கூட்டி வந்து பேழை மூடிக்குள் மண்டியிட்டு உட்கார வைப்பார்கள். உட்கார வைத்து சீர் செய்த பெண்ணும், மற்றும் இரண்டு பெண்களும் சேர்ந்து அந்தப் பெண்ணை பிடித்துக் கொள்வார்கள். அந்தப் பெண் தன்னுடைய கைகள் இரண்டையும் முதுக்குப் புறம் வைத்துக் கொண்டு பேழை மூடிக்குள் உட்கார்ந்திருப்பாள். அப்போது நாவிதன் தன்னிடமிருக்கும் மூன்று சாத உருண்டைகளையும் நிலவு வாசற்படிமேல் வரிசையாக வைப்பான். அப்போது பேழை மூடிக்குள் உட்கார்ந்திருக்கும் பெண்ணானவள் மண்டியிட்டபடியே கீழே குனிந்து தன்னுடைய மூக்கு முனையால் (நுனி மூக்கு) நிலவுமேல் இருக்கும் மூன்று உருண்டை சாதத்தையும் ஒவ்வொரு உருண்டையாக தள்ளிவிடுவாள். அப்போது நாவிதன் நிலவுக்கு இந்தப்புறம் ஒரு தட்டத்தை வைத்து மூன்று உருண்டை சாதத்தையும் பிடித்து அந்த

சாதங்களை வீட்டுக் கூரைமேல் வீசி விடுவான். பிறகு, அந்தப் பெண்ணை வெளியில் கூட்டி வந்து மஞ்சள் பூசி குளிக்க வைத்து வாசலில் கிழக்கு முகமாக நிறுத்தி விட்டு பேழை மூடியில் புதிய சீலை வைத்து அதை, சீர் செய்த பெண்ணவள் எடுத்து கிழக்கு முகமாக நின்று சூரியனுக்கு மூன்று முறை சுற்றி பிறகு, அந்தப் பெண்ணுக்கு மூன்று முறை சுற்றி பிறகு, அந்தப் பெண்ணுக்கு சீலையை எடுத்துக் கொடுப்பார்கள். அந்தச் சீலையை அந்தப் பெண் உடுத்திக் கொள்வாள். பிறகு, அந்தப் பெண்ணின் புருஷனுக்கும் தலையில் நெய், அரப்புத் தேய்த்து குளிக்க வைப்பார்கள். பிறகு, அவனுக்கும் புதிய வேஷ்டி, துண்டு பேழை மூடியில் வைத்து அவனுக்கு கொடுப்பார்கள். இவனுக்கு தண்ணீர் வாக்கும் போது சாதம் சுற்றிப் போட மாட்டார்கள்.

பிறகு இவைகளுக்கெல்லாம் சீர் செய்த பெண்ணும் தலைக்கு நெய் அரப்புத் தேய்த்து தண்ணி வாத்துக் கொள்வாள்.

இத்துடன் கருவாடும் சோறும் கல்லும் சீர் முடிந்தது.

---

கேள்வி 28 இந்தக் கேள்வி சரியாக புரியாமல் உங்களுக்கு அனுப்பியுள்ளேன்.

---

கேள்வி உ௪.

பதில்: பதினாறு வயதுக்குள் ஆண்களும், பெண்களும் இறந்து விட்டால் இறந்து போனவரின் பங்காளி மனைவி வந்து மஞ்சளை அம்மிக்கல்லில் வைத்து பொடியாகக் கொட்டி அந்த மஞ்சத்தாளை யெடுத்து ~~பெண்ணின் மேல்~~ பிணத்தின் மேல் போட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்வார்கள்.

மஞ்சள் பூசி குளிப்பாட்டுவது கிடையாது.

திருமணம் ஆனபிறகு இறந்தாலும் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டாலும் தேர் கட்டினால்தான் **பசும்பந்தல்** (பச்சைப் பந்தல்) போடுவார்கள். தேர் இல்லா விட்டால் பசும்பந்தல் போட மாட்டார்கள்.

---

கேள்வி உ௬.

பதில்: இறந்து போனவருடைய நங்கை அல்லது கொழுந்திதான் மஞ்சள் கொட்டிப் போட வேண்டும். அப்போது அவள் சிகப்புச் சீலைதான் கட்டியிருப்பாள்.

இறந்து போனவருடைய HBW மஞ்சள் கொட்டிப் போடலாம்.

---